**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 238/2023**

**Deposition of P.W. 11**

Name : திரு. ஷேக் அப்துல் காதர்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.04.2026**

**A1. A2 Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது குளச்சல் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது 06.01.2023 ம் தேதி திருவட்டார் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.ரமேஷ் என்பவர் பதிவு செய்து வைத்த திருவட்டார் காவல் நிலைய குற்ற எண். 5/2023 பிரிவுகள் 273, 328, இ.த.ச மற்றும் 24 (1) புகையிலை தடை சட்டம் உ/இ 77 இளஞ்சிறார் நீதி சட்ட படியான வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு உதவி ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றிய கணேஷ் டொபாக்கோ என எழுதப்பட்ட 15 பவுச்சுகள் கொண்ட பாக்கெட்டுகள் மொத்தம் 120 மற்றும் புகையிலையை விற்பனை செய்ய வைத்திருந்த ரூ.2,97, 550/– ஐ பார்வையிட்டு அதன் பின்னர் சம்பவ இடத்திற்கு 06.01.2023ம் தேதி காலை 09.15 மணிக்கு சென்று சாட்சிகள் மணி, பாலுபிள்ளை ஆகியவர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.5, பின்னர் நிலையம் வந்து 06.01.2023ம் தேதி 10.30 மணிக்கு திருவட்டார் காவல்நிலையத்தில் வைத்து 1வது எதிரியை கைது செய்து சாட்சிகள் ஏசுதாஸ், சதீஷ் ஆகியவர்கள் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதன் படி எதிரி மற்றும் சாட்சிகள் உடன் எதிரியின் வீட்டிற்கு சென்று எதிரியின் வீட்டிலிருந்து அடையாளம் காட்டி எடுத்துக்கொண்டு கணேஷ் 701 டொபாக்கோ என்று அச்சிடப்பட்ட 50 பாக்கெட்டும் மற்றும் 29 பாக்கெட்டும் ஒரு வெள்ளை நிற பிளாஸ்டிக் மூட்டையில் கூல் லிப் என்று அச்சிடப்பட்ட 36 பாக்கெட்டுகளையும் அத்தாட்சியில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6. TN 75 AC 6564 எண் கொண்ட சிவப்பு நிற பல்சர் இருசக்கர வாகனம் சா.பொ.1. கணேஷ் 701 டொபாக்கோ 60 பாக்கெட்டுகள் வீதம் 120 பாக்கெட்டுகள் அடங்கிய 2 மூடை சா.பொ.2, பணம் ரூ.2,97,550/- சா.பொ.3, கணேஷ் 701 டொபாக்கோ 50, 29 பாக்கெட்டுகள் அடங்கிய 2 மூடைகள் சா.பொ.4, கூல் லிப் பில்டர் டொபாக்கோ 36 பாக்கெட்டுகள் சா.பொ.5, வழக்குச் சொத்துக்ளையும் 1வது எதிரியையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். பின்னர் சாட்சிகள் உதவி ஆய்வாளர் திரு. ரமேஷ், திரு. டேவிட் ராஜ், திரு. பிரபுதாஸ், திரு. சைலின் ஜெப சுபின், மணி, திரு. பாலுபிள்ளை, சதீஷ், ஏசுதாஸ் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பணி மாறுதல் ஆகி விட்டப்படியால் வழக்கு கோப்பை பிந்தைய காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

அத்தாட்சியிலும், சாட்சிகளின் வாக்குமூலத்திலும் ரகசிய தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட போலீசார் சாட்சிகளை தவிர மற்றும் போலீஸ் பார்ட்டிகள் என்பதில் உள்ள நபர்களை நான் விசாரிக்கவில்லை. அந்த நபர்கள் யார் என்றால் போலீஸ் பார்ட்டிகள் என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அத்தாட்சியும், முதல் தகவல் அறிக்கையும் தவறுதலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் 1வது எதிரி ஓட்டி வந்ததாக கூறும் இருசக்கர வாகனத்தின்



பதிவு எண். TN 75 AC 6564 என்றால் சரிதான். அந்த வாகனத்தின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

ஆவணங்களையும் பார்வையிடவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் பகுதி வாகனங்கள் செல்லக்கூடிய பொது மக்கள் நடமாடும் பகுதி என்றால் சரிதான். சம்பவத்தை பார்த்ததாக கூறும் தனிப்பட்ட சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை. மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வீடுகளில் உள்ள நபர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை. எதிரி புகையிலை பொருட்களை எந்தெந்த கடைகளுக்கு விற்பனை செய்தார் என்று விசாரணையில் துலங்கவில்லை. எந்தெந்த கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு விற்பனை செய்தார் என்றும் துலங்கவில்லை. சம்பவ இடத்தின் அருகே பள்ளியோ, கல்லூரியோ கிடையாது என்றால் சரிதான். சான்று பொருட்கள் எந்த நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டது என்று விசாரணையில் துலங்கவில்லை. எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது என்று விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். எதிரி கொடுத்ததாக கூறும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியின் கையொப்பம் இல்லை. எதிரியின் வீட்டில் வைத்து பொருள் கைப்பற்றியதை காட்ட அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டை சோதனையிட சோதனை ஆணை பெறவில்லை என்றால் தேவையில்லை. 1வது எதிரியின் வீட்டின் அருகில் உள்ள நபர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை. புகையிலை பொருட்களை நான் பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை. எதிரியிடமிருந்து எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக பொய் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கண் சிகிச்சைக்காக வீட்டில் வைத்திருந்த தொகையை கைப்பற்றி வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல, 1வது எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2வது எதிரியிடமிருந்து பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான நபர்கள் எனது விசாரணையில் 2வது எதிரியிடமிருந்து, 1வது எதிரி பொருட்களை வாங்கி விற்பனை



செய்வதற்காக வீட்டில் வைத்திருந்ததாக வாக்குமூலம் கொடுக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வது எதிரியின் கையொப்பம் இல்லை. 2வது எதிரியை வழக்கில் சேர்ப்பதற்காக 1வது எதிரியிடமிருந்து பொய்யாக ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. பார்வை மகஜர்

மற்றும் மாதிரி வரைபடத்தில் 2 இடம் காட்டப்படவில்லை. கஞ்சா மற்றும் புகையிலை பொருட்களை கைப்பற்றும் போது பகுப்பாய்விற்காக சம்பவ இடத்திலிருந்து மாதிரியை சேகரிக்கப்பட வேண்டுமென்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருள் உணவு பொருள் என்று உணவு பாதுகாப்பு துறையிடமிருந்து அறிக்கை பெறப்படவில்லை. 2வது எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.238/2023**

**Deposition of P.W.** 12

Name : திருமதி ஜானகி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.04.2026**

**A1, A2 Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது தூத்துக்குடி மாவட்ட குற்றபிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது காவல் ஆய்வாளர் திரு. ஷேக் அப்துல் காதர் அவர்களால் முதல்விசாரணை செய்யப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட நிலைய குற்ற எண்.5/2023 வழக்கினை நான் எனது விசாரணைக்கு 27.02.2023ம் தேதி எடுத்துக்கொண்டு சாட்சிகள் ரெங்கதாஸ், மரிய ராஜகுமார், குமார் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே பிரிவு 273, 328 இ.த.ச , 24 (1) 6 (a) புகையிலை தடை சட்டம், பிரிவு 77 இளஞ்சிறார் நீதிசட்டப்படியாக வழக்கின் சட்ட பிரிவை மாற்றம் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்

<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சான்று பொருட்களை பரிசோதனைக்காக நான் அனுப்பவில்லை. சாட்சி குமாருக்கு நான் வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன சாட்சிகளை தவிர மற்ற சாட்சிகளிடம் நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. குற்றமாறுதல் அறிக்கையிலும் வாகனத்தின் பதிவு எண். TN 75 AC 6564 என்று குறிப்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி புகையிலை பொருட்களை பள்ளி, கல்லூாரி மாணவர்களுக்கு விற்பனை செய்ததாக தெரிய வரவில்லை. எந்த கடைகளுக்கு எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்தார்கள் என்று தெரிய வரவில்லை. குற்ற இறுதி அறிக்கையில் புகையிலை பொருட்களின் மதிப்பை தன்னிச்சசையாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தின் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. 1வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படும் வரை 2வது எதிரி கைது செய்யப்படவும் இல்லை, முன்பிணையும் பெறவில்லை. எதிரிக்கு நீதிமன்ற அழைப்பாணை கிடைத்த பிறகு தான் வழக்கு உள்ள விபரம் தெரியும் என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக 2வது எதிரியின் பெயரை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகையிலையை பயன்படுத்தியதால் உடல்நிலை பாதிக்கப்பட்டதாக என்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மரியராஜகுமார். ரெங்கதாஸ் ஆகியவர்களுக்கு மருத்துவ சான்று

எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. 2வது எதிரி புகையிலை பொருளை சாட்சிகள் மரிய ராஜகுமார் ரெங்கதாஸ் ஆகியவர்களுக்கு கொடுத்ததாகவும்அதனால் அவர்களுக்கு உடல் உபாதை ஏற்பட்டதாகவும் குற்ற மாறுதல்அறிக்கையில் நான் குறிப்பிடவில்லை. 2வது எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.